A 23

1.

நாய்க்கர் ஜாதியில் அவர்களுடைய கல்யாணத்தின்போது முகூர்த்-தம் நடப்பதற்கு முன்பு பெண்ணு, மாப்பிள்ளை இருவரையும் தனித்தனி யாக உட்கார வைத்து தண்ணி வார்ப்பார்கள். அப்போது அவர்களின் தலைக்கு நெய், அரப்பு கொஞ்சம் துடைத்து விட்டு பிறகு அவர்களுக்கு முதலில் ~~வெள்ளை~~ மஞ்ச சோறும் இரண்டாவது ~~மஞ்சள் பொடி கலந்த மஞ்சள் சோறும்~~ அடுப்புக்கரி கலந்த கருப்புச் சோறும், மூன்றாவது ~~மஞ்சள் பொடி கலந்த மஞ்சள்~~ வெள்ளைச் சோறும் சுத்திப்-போடுவார்கள். பிறகு, தண்ணீர் வார்ப்பார்கள்.

இவர்களில் நிறைநாழி சுத்துவதில்லை.

பிறகு, முகூர்த்தம் முடிந்த பிறகு பெண் மாப்பிள்ளைக்கு உடுத்தும் தண்ணீர்முக்கில் ஆத்தித்தழை கொஞ்சம் போட்டு வைத்திருப்பார்கள். பிறகு, பெண்ணு மாப்பிள்ளை இருவரையும் கூட்டி வந்து இருவரையும் ஜோடியாக கிழக்கு முகமாக உட்கார வைப்பார்கள். அப்போது பெண்ணுடைய சீலை முந்தானையின் ஒரு முனையை எடுத்து மாப்பிள்ளையின் இடுப்-பில் சொருகி விடுவார்கள். அதேபோல் மாப்பிள்ளை வேஷ்டியின் ஒரு முனையைப் பிடித்து பெண்ணுடைய இடுப்பில் சொருகிவிடுவார்கள். அது:)




மேற்கண்டபடி பெண்ணின் சீலையை மாப்பிள்ளையின் இடுப்பிலும் மாப்பிள்ளையின் வேஷ்டியை பெண்ணின் இடுப்பிலும் சொருகி யானபின் இருவருடைய தலைக்கும் கொஞ்சம் நெய் அரப்புத்-தேய்ப்பார்கள் பிறகு, மஞ்சள் சாதம், கருப்புச்சாதம், வெள்ளைச் சாதம் ஆகிய மூன்று சாதங்களும் வரிசைப்படி சுத்திப் போடுவார்கள். அதன்பிறகு மாப்பிள்ளையானவர் தன்னுடைய கையில் கொஞ்சம் மஞ்சளைத் ~~குழைத்து~~ தொட்டு பெண்ணின் மேல் துடைப்பார். அதேபோல் பெண்ணும் தன்னுடைய கையில் கொஞ்சம் மஞ்சளைத் தொட்டு மாப்பிள்ளையின் மேல் துடைப்பாள்.

பிறகு, இருவருக்கும் தண்ணீரை ஊத்தி நன்றாகக் குளிக்கச்-செய்து வீட்டுக்குள் கூட்டிச் சென்று விடுவார்கள்.

இறப்பு சீரின்போது கொல்லி வைத்தவனுக்கு அல்லது மண்ணுத் தள்ளியவனுக்கு முகசவரம் செய்து தலைக்கு கொஞ்சம் நெய் அரப்புத் தேய்த்து தண்ணீ வாப்பதுதான். மற்றபடி சாதம் சுத்திப் போடும் பழக்கம் இல்லை. அவனுக்கு தண்ணீ வாத்த பின்பு புதிய வேஷ்டி துண்டு கொடுப்பார்கள். புதிய வேஷ்டி துண்டு அவன் பிறந்தவள் வாங்கிக் கொடுப்பாள். கல்யாணமானவனாக இருந்தால் மாமனார் வீட்டிலிருந்து வேஷ்டி துண்டு கொடுப்பார்கள்.

இவர்கள் ஜாதியிலும் எந்த சீருக்கும் 7 பானை தண்ணீர் உபயோகிப்பதில்லை.

முகூர்த்தத்திற்கு பிறகு பெண்ணு மாப்பிள்ளைக்கு வாக்கும் தண்ணீரில் ஆத்தித் தழையை போட்டு அந்தத் தண்ணீரை பெண்ணு மாப்பிள்ளைக்கு வாப்பதை இவர்கள் ஜாதியில் "ஆக்கை போட்டு தண்ணீர் வாப்பது" என்று சொல்கிறார்கள்.

×

---

2. சக்கிலியர் ஜாதியில் கல்யாணத்தின் போது முகூர்த்தம் நடைபெறுவதற்கு முன்பு பெண் மாப்பிள்ளை இருவரையும் தனித்தனியாக கிழக்கு முகமாக உட்கார வைத்து மஞ்சள் கலந்த சாதம் சுத்திப்போட்டு தண்ணீ வாப்பார்கள். கவுண்டர்களில் மாப்பிள்ளைக்கு புளியங்குச்சி (ஆக்கை) போட்டு தண்ணீ வாப்பது போல் சக்கிலியர் ஜாதியில் பெண்ணு மாப்பிள்ளை இருவருக்கும் ஆக்கை போட்டு தண்ணீ வாப்பார்கள். பிறகு, ஒரு படியில் அரிசி போட்டு அதில் நூலுடன் தாருக்கருது குத்தி அந்த அரிசிக்குள் இரண்டு வெற்றிலை பாக்கு, வெல்லம் ஒன்று வைத்து படியுடன் எடுத்து மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் சுற்றுவார்கள். இதுதான் இவர்கள் ஜாதியில் நிறைநாளி என்று சொல்கிறார்கள்.

பெண் மாப்பிள்ளையின் தலைக்கு நெய் அரப்பு தேய்ப்பதில்லை. மஞ்சள் சாதம் தவிர வேறு சாதம் சுற்றுவதில்லை.

சக்கிலியர் ஜாதியில் இறந்த சீரின் பேரது கொல்லி வைத்தவனுக்கு தண்ணி வாப்பது எப்படியென்றால், வீட்டு வாசலில் ஒரு முக்காலி போட்டு அந்த முக்காலியின் மேல் கொல்லி வைத்தவனை கிழக்கு முகமாக உட்கார வைத்து அவன் தலையில் கொஞ்சம் எநய் அரப்புத் தேய்த்து பிறகு, மஞ்சள் கலந்த சாதம் சுத்திப் போட்டு தண்ணி வாப்பார்கள். தண்ணி வாத்த பிறகு புதிய வேஷ்டி துண்டு கொடுப்பார்கள். இது பிறந்தவள் எடுத்துக் கொடுப்பாள். கல்யாணமானவனாக இருந்தால் மாமனார் வீட்டிலிருந்து எடுத்துக் கொடுப்பார்கள்.

இவர்கள் ஜாதியிலும் எந்த சீருக்கும் 9 பானை தண்ணீர் என்ற கணக்குடன் உபயோகிப்பதில்லை.

---

3. குறவர் ஜாதியில் கல்யாணத்தின் போது முகூர்த்தத்திற்கு முன்பு பெண் மாப்பிள்ளை இருவருக்கும் தனித்தனியாக தண்ணி வாப்பார்கள். அப்போது இருவருடைய தலையிலும் எநய், அரப்புத் தேய்த்து பிறகு, வெள்ளைச் சாதம், சிகப்புச் சாதம் சுத்திப் போட்டு தண்ணி வாப்பார்கள்.

பிறகு, முகூர்த்தம் முடிந்தபின் பெண்ணு மாப்பிள்ளை இருவரையும் ஜோடியாக கிழக்கு முகமாக உட்கார வைத்து மாப்பிள்ளையின் வேஷ்டி முனையையும் பெண்ணின் முந்தானை சீலையின் முனையையும் ஒன்றாகச் சேர்த்து முடிந்து விடுவார்கள்.




மேற்கண்டபடி பெண்ணின் சீலையையும், மாப்பிள்ளையின் வேஷ்டியையும் ஒன்றாகச் சேர்த்து முடிந்த பிறகு இருவருடைய தலைக்கும் கொஞ்சம் எநய் அரப்புத் தேய்த்து முன்போலவே வெள்ளைச் சாதம் செஞ்சாதம் சுத்திப் போட்டு

வார்கள். பிறகு, மாப்பிள்ளை மூன்று சொம்பு தண்ணீர் பெண்ணின் மேல் ஊத்துவார். பெண் மூன்று சொம்பு தண்ணீர் எடுத்து மாப்பிள்ளை மேல் ஊற்றுவாள். பிறகு, பெண் மாப்பிள்ளை இருவருக்கும் ஆக்கை போட்டு தண்ணி வாப்பார்கள். இந்த ஆக்கையும் புளியங் குச்சிதான். பிறகு, பெண், மாப்பிள்ளை இருவரையும் நன்றாகக் குளிக்க வைத்து வீட்டுக்குள் கூட்டிச் சென்று விடுவார்கள் அவ்வளவு தான்.

இவர்கள் ஜாதியில் நிறைநாளி சுத்தும் பழக்கம் இல்லை.

இறப்புச் சீரின் போது கொல்லி வைத்தவனுக்கு மட்டும் தண்ணிக் கிணற்றுப் பக்கம் முக்காலி போட்டு கொல்லி வைத்தவனை கிழக்கு முகமாக உட்கார வைத்து அவன் தலைக்கு நெய், அரப்பு துடைத்து பிறகு, வெள்ளைச்-சாதம், சிகப்புச் சாதம் இரண்டும் சுத்திப் போட்டு தண்ணி வாப்பார்கள். பிறகு, புதிய வேஷ்டி துண்டு கொடுப்-பார்கள். இந்த வேஷ்டி துண்டு அவனுடைய பிறந்தவள் எடுத்துக் கொடுப்பாள். கல்யாணமானவனாக இருந்தால் மாமனார் வீட்டில் எடுத்துக் கொடுப்பார்கள்.

இவர்கள் ஜாதியிலும் எந்த சீருக்கும் 9 பானை தண்ணீர் தான் என்ற கணக்கிட்டபடி உபயோகிப்பதில்லை.

—— x ——

4 முதலியார் ஜாதியில் கல்யாணத்தின் போது முகூர்த்தத்திற்கு முன்பு பெண்ணு மாப்பிள்ளை இருவருக்-கும் தனித் தனியே தண்ணி வாப்பார்கள். அது: பெண் மாப்பிள்ளை இருவருக்-கும் தலையில் கொஞ்சம் நெய் அரப்பு இரண்டும் கொஞ்சம் துடைத்து பிறகு, வெள்ளைச் சாதம் சிகப்புச் சாதம் இரண்டும் சுத்திப்போட்டு கவுண்டர்களின் சீர் போல தண்ணி வாப்பார்கள். (ஆனால், கவுண்டர்கள் சீர்போல நிறைநாளி, ஆக்கை இரண்டும் உபயோகிப்பதில்லை) பிறகு, பெண், மாப்பிள்ளை இருவருக்கும் ஆலாத்தி சுற்றுவார்கள் அவ்வளவுதான்.

முகூர்த்தம் முடிந்த பிறகு பெண் மாப்பிள்ளை இருவரையும் ஜோடியாக உட்கார வைத்து பெண்ணின் சேலை முந்தானையின் நுனியையும் மாப்பிள்ளையின் வேஷ்டி முனை இரண்டையும் நன்றாகச் சேர்த்து முடிந்து விடுவார்கள். பிறகு, இவர் தலையிலும் கொஞ்சம் நெய், அரப்புத் துடைத்து பிறகு, வெள்ளைச்சாதம் சிவப்புச்சாதம் சுத்திப் போட்டு தண்ணி வாப்பார்கள். பிறகு, இருவருக்கு ஆலாத்தி சுத்திவிட்டு அவர்களுடைய (இரண்டுபேருடைய) துணிகளையும் சேர்த்து

பிறந்துள்ள முடிப்பை அவிழ்த்து விட்டு வீட்டுக்குள் கூட்டிச் - செல்வார்கள் அவ்வளவுதான்.

இறப்புச் சீரின் போது கொல்லி வைத்தவர், பட்டு போட்டவர், கோடி போட்டவர், பின்னப்பூ போட்டவர் இவர்கள் நான்கு பேரை யும் ஊருக்கிணற்றடியில் உட்கார வைத்து இவர்களின் தலைக்கி நெய், அரப்புத்துடைத்து பிறகு, வெள்ளைச் சாதம், இலைப்பு சாதம் இவைகள் எல்லாம் அத்தில் போட்டு தண்ணி வைப்பார்கள். இந்த சீர் கவுண்டர்கள் சீர் போலவே நடக்கும் மாற்றம் இல்லை. கடைசியில் நாலவருக்கும் புதிய வேஷ்டிகள், துண்டுகள் கொடுப்பார்கள்.

இவர்கள் ஜாதியிலும் எந்த சீருக்கும் 9 பானை தண்ணீர் என்ற கணக்குடன் உபயோகிப்பதில்லை.

குறிப்பு:

1, இதற்கு முன் நான் அனுப்பிய முதலியார் சடங்குகளில் இளிக்கும் சீர் கன்னபுரத்தில் இருக்கும் முதலியார்களுடைய சீராகும். அவர்கள் சீரில் கல்யாணத்தின் போது பெண்ணு மாப்பிள்ளைக்கி தண்ணி வாக்கும் சீரில் மூறை நாளி, ஆக்கை இரண்டும் கவுண்டர்கள் சீர்போல் உபயோகிப்பார்கள்.

2, இப்போது நான் எழுதி அனுப்பியுள்ளது ஆலப்பாளையத்தில் உள்ள வெண்முக முதலியார் வம்சத்தினர் சீராகும்.

---

மற்றபடி, பிராமணர், கணக்குப்பிள்ளை, சோழி ஆசாரி இவர்கள் ஜாதிகளில் இறப்பு, கல்யாணம் இவைகளில் இளிக்கும் சீர் ஒரே மாதிரிதான். இந்த சீர் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் இதற்கு முன் நான் அனுப்பியுள்ள பிராமணரின் கல்யாணச்சீர், இறப்புச் சீர் இவைகள் இரண்டையும் இளிக்கும் சீரைப் பாருங்கள். அதில் உள்ளபடிதான் மற்ற இரண்டு ஜாதிகளிலும் நடைபெறும்.

---

பறையன் ஜாதியில் கல்யாணம், இறப்பு ஆகிய சீர்களில் இளிக்கும் சீர்கள் கவுண்டர்களைப் போன்றதுதான் மாற்றமில்லை.

மற்றும் பண்டாரம், கொங்கு நாவிதன் இவர்களுடைய இளிக்கும் சீரும் கவுண்டர்களைப் போன்றதுதான்.

---


| | | | | |
|---|---|---|---|---|
| பருப்பு ரசம் — | இலேசான மஞ்சள் நிறம் — | புளிப்பு, உப்பு, காரம் ஆகிய சுவைகளுடன் நல்ல ருசியாக இருக்கும். — | குளிர்ச்சி — | துவரைப்பருப்பு வேகவைத்து அந்தத் தண்ணியிலிருந்து தயாரிக்கப்படுகிறது. |
| மிளகு ரசம் — | கருப்பு நிறம் — | ,, | குளிர்ச்சி — | புளியுடன் இடிமிளகு சேர்த்து தயாரிக்கப்படுகிறது. |
| எலுமிச்சம்பழம் — | இலேசான மஞ்சள்நிறம் — | ,, | குளிர்ச்சி — | துவரைப்பருப்பு வேகவைத்து அந்தத் தண்ணீருடன் எலுமிச்சம்பழ ரசம் பிழிந்து தயாரிக்கப்படுகிறது. |
| தக்காளிரசம் — | இலேசான சிவப்பு நிறம் | ,, | உஷ்ணம் — | தக்காளிப்பழத்தில் தயாரிக்கப்படுகிறது. |
| பனைமர பதனீர் | தண்ணீர் போன்று லேசான வெள்ளை, ~~இளகப்புத்~~ கருப்பு நிறம் — | இனிப்பு — | குளிர்ச்சி — | பனைமரத்திலிருந்து கிடைக்கிறது. |
| தென்னைமர பதனீர் — | ,, | இனிப்பு — | உஷ்ணம் — | தென்னைமரத்திலிருந்து கிடைக்கிறது. |
| பனைமரக் கள் — | வெள்ளைநிறம் ~~இலேசான இனிப்பு, கசப்புத் புளிப்பு~~ | இலேசான இனிப்பு, புளிப்பு சிறு கசப்புடன் இருக்கும் — | குளிர்ச்சி — | பனைமரத்திலிருந்து கிடைக்கிறது. |
| தென்னைமரக் கள் — | ,, | புளிப்பு, கசப்புடன் இருக்கும் — | உஷ்ணம் — | தென்னைமரத்திலிருந்து கிடைக்கிறது. |
| பசுமாட்டுத் தயிர் | ~~இலேசான மஞ்சள் நிறமான~~ வெள்ளை — | இலேசான புளிப்பு | குளிர்ச்சி — | பசுமாட்டுப் பாலிலிருந்து தயாராகிறது. |
| எருமைத்தயிர் — | வெள்ளைநிறம் — | இலேசான புளிப்பு | குளிர்ச்சி & உஷ்ணம் - | எருமைப் பாலிலிருந்து கிடைக்கிறது. |
| பசுமாட்டு மோர் | வெள்ளைநிறம் — | ,, | குளிர்ச்சி — | பசுமாட்டுத்தயிரிலிருந்து எடுக்கப்படுகிறது. |
| எருமை மோர் - | ,, | ,, | குளிர்ச்சி & உஷ்ணம் | எருமைத்தயிரிலிருந்து எடுக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| மிளகாய் | பச்சை & சிவப்பு நிறம் | காரம் - - - | உஷ்ணம் - - - | ஒரு வகை செடியின் காய். |
| கருவாப்பில் தழை | பச்சை நிறம் — | கிலேசான கச்சல் | குளிர்ச்சி — | ஒரு வகை மரத்தின் தழை |
| கொத்தமல்லித் தழை | பச்சை நிறம் கிலேசானது | கிலேசான கச்சல் & இனிப்பு - | குளிர்ச்சி — | கொத்தமல்லி செடியின் தழை |
| பசுமாட்டு வெண்ணை | லேசான மஞ்சள் வெள்ளை நிறம் — | — | குளிர்ச்சி — | மாட்டுப்பாலிலிருந்து எடுக்கப்படுகிறது |
| எருமை வெண்ணை | வெள்ளை நிறம் — | — | குளிர்ச்சி & உஷ்ணம் | எருமைப் பாலிலிருந்து எடுக்கப்படுகிறது. |
| பசு நெய் — | தண்ணீர்போன்று கிலேசான மஞ்சள்நிறம் — | — | குளிர்ச்சி — | பசுமாட்டு வெண்ணையிலிருந்து தயாரிக்கப் படுகிறது |
| எருமை நெய் — | தண்ணீர் போன்றது | — | குளிர்ச்சி & உஷ்ணம் | எருமை வெண்ணையிலிருந்து தயாரிக்கப் படுகிறது. |
| தேங்காய் எண்ணை — | தண்ணீர் போன்றது கிலேசான வெள்ளை நிறம் - | — | குளிர்ச்சி — | விளைந்த தேங்காயிலிருந்து எடுக்கப்படுகிறது. |
| கடலை எண்ணை - | லேசான மஞ்சள் நிறம் | — | உஷ்ணம் — | வேர்கடலை பருப்பிலிருந்து எடுக்கப்படுகிறது. |
| நல்ல எண்ணை | கிலேசான சிவப்பு நிறம் | — | குளிர்ச்சி — | எள்ளு என்ற பயிறிலிருந்து எடுக்கப்படுகிறது. |
| விளக்கெண்ணை - | தண்ணீர்போன்ற நிறம் - | — | குளிர்ச்சி — | கொட்டை முத்து என்ற கொ முத்திலிருந்து எடுக்கப்படுகிறது. |
| தேங்காய் தண்ணீர் | தண்ணீர்போன்றது. லேசான வெள்ளைநிறம் - | இனிப்பு — | குளிர்ச்சி & உஷ்ணம் | தேங்காயிலிருந்து கிடைக்கிறது. |
| காவேரித் தண்ணீர் - | தண்ணீர் நிறந்தான் | — | குளிர்ச்சி — | காவேரி ஆற்றிலிருந்து கிடைக்கிறது. |
| சிறுவாணி தண்ணீர் - | ,, | — | குளிர்ச்சி — | சிறுவாணி ஆற்றிலிருந்து கிடைக்கிறது. |

3வது கேள்வி.

பதில்: கறிவகைகளில் அநேகமாக (ஆடு, கோழி, மீன், வாத்து, முயல்) இப்படி சில கறிகளை கவுண்டர்களைப்போன்ற உயர்ந்த ஜாதிகள் சாப்பிடுவது அது அவர்கள் முன்காலத்து பழக்கமேதவிர வேறொன்றுமில்லையென்று நான் நினைக்கிறேன். முன்காலத்தில் உயர்ந்த ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள் பன்றிக்கறியை சாப்பிட மாட்டார்கள். ஆனால், இப்போது பன்றிக்கறியை எல்லோரும் சாப்பிடுவார்கள். ஆனால் மாட்டுக்கறி, எருமைக்கறி இவைகளை மட்டும் சக்கிலி, பறையன் இவர்களைத்தவிர யாரும் சாப்பிடுவதில்லை. இதன் காரணம் என்னவென்று புரியவில்லை. மேற்கண்ட இரண்டு ஜாதிகள் தவிர மற்ற ஜாதியினர்கள் எல்லோரும் மாடு, எருமை போன்றவைகளின் கறியை ரொம்ப மட்டமான கறியாக மதிக்கிறார்கள். பறையர், சக்கிலியர் இவர்கள் மாட்டுக்கறியைத் தான் முதன்மையாக (சிறந்ததாக)க் கொண்டு சாப்பிடுகிறார்கள். இந்த தாழ்ந்த ஜாதியினர்கள் மாடு, எருமை கறியுடன் மற்ற மிருகங்களின் கறியையும், பறவைகளின் கறியையும் சாப்பிடுவார்கள். இவர்கள் எந்தக்கறியையும் "வேண்டாம்." என்று ஒதுக்குவதில்லை.

பறையர், சக்கிலியர் இவர்கள் மட்டும் எருமை, மாடு இவைகளின் கறியை சாப்பிடுவதின் காரணம் ~~உதாரணத்திற்கு~~ ~~அவர்கள்தான்~~ மேற்கண்ட ஜாதியினர்கள் இருவரும் ~~தப்பட்டை அடிப்பதற்கு~~ தப்பட்டை (Small drum



← தப்பட்டை) அடிப்பதற்கு ஏற்பட்டவர்கள். இந்தத் தப்பட்டைக்குப் போடும் தோல் எருமை, மாடு இவைகளின் தோல்தான் போடவேண்டும். ஆகையால், முன்காலத்தில் இவர்கள் மாடு, எருமை இவைகளின் தோலை உரித்து தப்பட்டைக்கு வைத்துக் கொண்டு அவைகளின் மாமிசங்களை சாப்பிட்டுக்கொண்டிருந்திருப்பார்கள். அதனால்தான் அவர்களுக்கு ~~இன்னும்~~ ~~வேண்டுமென்ற~~ மேற்கண்ட மாமிசங்களை சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறேன்.

மற்றபடி கவுண்டர்கள் போன்ற ஜாதிகள் மாடு, எருமைகளின் கறிகளை சாப்பிடாத பழக்கத்தின் காரணம் ~~மேற்கண்ட~~ இவர்கள் மாடு, எருமைகள் இவைகள் விவசாயத்திற்கும், வண்டி இழுப்பதற்கும் அதிகமாக பயன் கொடுக்கிறதல்லவா? அதனால், அவர்கள் நமக்கு உணவுக்கு பால்கொடுத்தும், விவசாயத்திற்கு முக்கியமான வேலைக்கு உதவும், மற்றும் வண்டி இழுக்கிறது இப்படி பல வழிகளில் உதவி கொடுத்து வரும் மிருகங்களை நாமே வளர்த்து நாமே சாப்பிடக் கூடாது என்று விட்டிருப்பார்கள். அதே பழக்கம் இன்றும் (இப்போதும்) இருந்து வருகிறது என்று நினைக்கிறேன்.

மற்றபடி, கவுண்டர்கள் போன்ற உயர்ந்த ஜாதியினர்கள் மாட்டுக்கறியை ஏன் சாப்பிடக்கூடாது என்பதற்கு வேறு காரணம் ஒன்றுமில்லை.

Oppalayam

சில மாமிசங்கள் அதாவது (வெள்ளாட்டுக்கறி, முயல்கறி, பன்றிக்கறி, புறா) இது போன்ற கறிகளை மற்ற உணவுகளைவிட மேன்மையாகக் கருதப்படுவது அந்த மாமிசங்கள் உடம்பில் பலம், ரத்த விருத்தி அப்படியாக உடம்புக்கு நல்லதாகக் கருதப்படுவதால்தான் தவிர, இதற்கு வேறு காரணம் ஒன்றுமில்லை

5. வது கேள்வி.
பதில்: இட்டுக்குருவி, மைனா இவைகளை பிராமணர், கணக்குப்பிள்ளை, சோழிய ஆசாரி, கோமுட்டிச் செட்டியார் இவர்களைத் தவிர எல்லா ஜாதியினருமே சாப்பிடுவார்கள்.

6 வது கேள்வி. ~~பெருச்சாளியும், மானும்~~ மான், பெருச்சாளி இவைகளில் மான் மாமிசம் சூடானதாகவும், பெருச்சாளி மாமிசம் குளிர்ச்சியானதாகவும் நான் நினைக்கிறேன்.

7 வது கேள்வி. ~~பயிறு என்பது~~ பயிறுகளை வெயிலில் போட்டு உடைத்து அதன் தோல்களை நீக்குவதற்கு முன்பு "பயிறு" என்று சொல்வது. அ பயிறுகளை வெயிலில் போட்டு உடைத்து தோல் நீக்கிய பின் "பருப்பு" என்று சொல்வார்கள். ~~தோ~~ வெயிலில் போட்டு உடைக்கும் போது ஒவ்வொரு பயிறுக்கும் இரண்டு பருப்புகள் கிடைக்கும்.

8. பெண் தெய்வத்திற்கு பச்சை, பூலாங்கிழங்கு, ~~கஸ்தூரி~~ மஞ்சள் இவைகள் எல்லாம் சேர்த்து அரைத்துத்தான் பொட்டு வைக்க வேண்டும். மேற்கண்ட 3 பொருள்களையும் சேர்த்து அரைத்து அதை தெய்வத்திற்கு உபயோகிப்பதால் தான் அதை திருமஞ்சள் என்று சொல்கிறார்கள். ~~திரு என்பது~~

இவைகளில் பச்சை என்பது ஒருவகைச் செடியின் தழை, பூலாங்கிழங்கு என்பதும் ஒருவகை செடியின் வேரில் உள்ள கிழங்கு இவைகளுடன் மஞ்சளைச் சேர்த்து ~~அரைப்பதுதான்~~ அரைத்தால் ~~நல்ல~~ பொன்நிறப்பு கலராக இருக்கும். இது நல்ல வாசனையாகவும் இருக்கும். இந்த மஞ்சளை தெய்வத்திற்குமட்டும் உபயோகிப்பதால் "திருமஞ்சள்" என்று சொல்கிறார்கள்.

சொர்ணபுஷ்பம் என்பது சமஸ்கிருதப் ~~மொழியாக~~ பெயராக இருக்கலாம்.

சொர்ணம் என்பது வெள்ளியால் செய்த நாணயம். இதை தெய்வத்தின்மேல் (நெற்றிமேல்) வைப்பதால் புஷ்பம் என்ற சொல்லை சேர்த்து சொர்ணபுஷ்பம் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

9வது கேள்வி.

பதில்:— பெரிய அபிஷேகத்தில் No 3 பஞ்சாமிர்தம், 7 மாம்பழம், 9 கரும்புப் பால் இவைகள் சூடுதான். மேற்கண்ட 3, 7, 9 எண்களில் உண்மையான பொருள்களை உபயோகிக்க வேண்டுமென்பது கிடையாது. இவைகள் எல்லாம் முன்காலத்திலிருந்து சாஸ்திர முறைப்படி ஏற்பட்டது. ஆகையால், மேற்கண்ட எண்களில் தான் உண்மைப் பொருள்களை படைக்க வேண்டுமென்பது கிடையாது.

18 வகைப் பொருள்களினால் அபிஷேகம் செய்வதின் முக்கிய காரணம் ஒன்றுமில்லை ~~அது அக்காலத்தி~~ முன்காலத்து சாஸ்திர முறைப்படி ஏற்பட்டது என்று சுந்தரக் குருக்கள் அவர்கள் சொல்கிறார்கள். மேலும், அவர் பெரிய அபிஷேகத்திற்கு ஏற்பட்டது 16 வகைப் பொருள்கள் தான் என்று சொல்கிறார்.

சிறிய அபிஷேகத்தில் பஞ்சாமிர்தம் இரண்டாவது பொருளைக உபயோகப் படுத்துவதின் காரணம் என்னவென்றால், சுமாரான ~~இருக்~~ வசதியுள்ள குடும்பத்தினர்கள் பெரிய அபிஷேகத்திற்கு எல்லா சாமானையும் வாங்க முடியாது. அப்போது அவர்கள் பஞ்சாமிர்தத்திற்கு பின்பு உபயோகிக்கும் சீய்க்காய்தூளும் வாங்காமல் விடுவார்கள். அதனால், பஞ்சாமிர்தம் இரண்டாவது பொருளைக உபயோகிக்கப் படுகிறது தவிர இதற்கு வேறு காரணம் ஒன்றுமில்லை.

சுந்தரக் குருக்கள் சொன்ன பெரிய ~~அபி~~ அபிஷேகத்தின் 16 பொருள்கள் கீழே:-
1. நல்லெண்ணெ, 2. பஞ்சாமிர்தம், 3. தேன், 4 நெய், 5. பால், 6. தயிர், 7. இளநீர், 8. திருமஞ்சள், 9. சந்தனம், 10 பன்னீர், 11 விபூதி, 12 எலுமிச்சம்பழம், 13. சீய்க்காய் தூள், 14. கரும்பு, 15. சொர்ணம் (பணம் அல்லது தங்கம்) 16. தீர்த்தம்.

இந்த அபிஷேகத்திற்கு சமஸ்கிருதத்தில் "சோடஷ அபிஷேகம்" என்பது பெயர்.

சோடஷம் என்பது தமிழில் பதினாறு என்ற எண்ணைக் குறிக்கும் சொல்.

11வது கேள்வி.

பதில்: ஒரு மழை பெய்யவில்லையென்றால் ஊர்க்காரர்கள் எல்லாம் சேர்ந்து மாகாளியம்மனுக்கு அபிஷேகம் செய்வது போல் மாரியம்மனுக்கும் அபிஷேகம் ~~செய்வார்கள்~~ செய்வதுண்டு. மாரியம்மன் கிராமதேவதையாக இருப்பதால் கிராமத்துக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து பொதுவில் அபிஷேகம் செய்வார்கள். அல்லது முக்கியமான சில ~~ஊர~~ (இரண்டு, மூன்று) ஊர்க்காரர்கள் சேர்ந்து அபிஷேகம் செய்வார்கள். ஒரே ஊருக்காரர்கள் வேண்டுமானாலும் செய்யலாம். இது அவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது என்று சொல்லலாம்.

மற்றபடி ~~ஒரு~~ ஊரில் பெண்கள் எல்லாம் சேர்ந்து "உக்கை" எடுத்துக்கொண்டு போயி ஒவ்வொரு வீட்டு வாசலிலும் வைத்து கும்மி அடித்து பாட்டுப்பாடி மழைச்சோறு எடுக்கும் சீர் அவரவர்கள் ஊருக்குள் மட்டும் அவ்வாறு செய்வார்கள்.

ஆனால், இறவர் ஜாதிப் பெண்கள், சக்கிலிய ஜாதிப் பெண்கள் எல்லாம் மேற்கண்டவாறு மழைச்சோறு எடுக்கும் போது கிராமத்திற்குச் சேர்ந்த எல்லா ஊர்களுக்கும் போய் சோறு, தானியம் இவைகள் எல்லாம் வாங்குவார்கள்.

கேள்வி 12.

பதில்: ~~[illegible]~~ இனிக்கும் சீர்கள் பற்றி சோழிய ஆசாரி, பிராமணர், கொங்கு ஆசாரி, உடையார், நாயக்கர், கோமுட்டி செட்டியார், வண்ணான், நாடார், முதலியார் ஆகிய ஜாதிகளின் இனிக்கும் சீர்களை நான் எழுதி ஏற்கனவே உங்களுக்கு அனுப்பியுள்ளேன். மற்றும் இன்னும் மீதியுள்ள ஜாதிகளின் இனிக்கும் சீர்களை இத்துடன் எழுதி அனுப்பியுள்ளேன்.

முதலியார் ஜாதியில் கல்யாணத்தின் போது பெண்ணை மாப்பிள்ளையை முகூர்த்தத்திற்கு முன்பும் இனிக்க வைக்கிறார்கள். முகூர்த்தத்திற்கு பிறகும் இனிக்க வைக்கிறார்கள்.

முகூர்த்தத்திற்கு முன்பு பெண் மாப்பிள்ளையை இனிக்க வைக்கும் போது கவுண்டர் ஜாதியில் சீர் செய்வது போலவே செய்கிறார்கள் மாற்றம் கிடையாது.

முகூர்த்தம் முடிந்த பிறகு பெண்ணு மாப்பிள்ளை இருவரையும் ~~முக்~~ முக்காலிகள் இருவரையும் ஜோடியாக கிழக்கு முகமாக உட்கார வைத்து பெண்ணுடைய சேலைமுந்தானையின் ஒரு முனையையும், மாப்பிள்ளையின் வேஷ்டியின் ஒரு முனையையும் சேர்த்து முடிந்து விடுவார்கள். பிறகு, அண்டாவில் இருக்கும் தண்ணீரில் கொஞ்சம் மஞ்சள் தூள் —

நாலாம்:

கல்யாணத்தின் போது கொடுத்ததிற்கு முன்பு பெண், மாப்பிள்ளை இருவரையும் தனித்தனியே உட்கார வைத்து நெய் அரப்புத் தேய்த்து முதலில் மஞ்சள் சோறும், இரண்டாவது கருப்புச் சோறும் மூன்றாவது வெள்ளைச் சோறும் சுத்திப் போட்டு தண்ணி வாப்பார்கள்.

கொடுத்தும் செய்தபின் ~~அத்தித்திருவிழா~~ பெண் மாப்பிள்ளை இருவரையும் சேர்ந்தாற்போல கிழக்கு முகமாக உட்கார வைத்து அவர்களுக்கு உணர்ந்தும் போட்டு விடுவார்கள். அதன்பிறகு தண்ணீரில் அத்தித்திழையை போட்டு ... பெண்ணின் இலையை எடுத்து ஒரு முனையை மாப்பிள்ளையின் கையில் பெண்ணின் கையில் கொடுத்து, மாப்பிள்ளையின் வேஷ்டியை பெண்ணின் கையில் சொருகி பிறகு தண்ணி வாப்பார்கள். இப்போதும் மஞ்சள் சாதம், வெள்ளை சாதம், கருப்பு சாதம் மூன்றும் சுத்திப்போட்டு தண்ணி வாப்பார்கள். பிறகு, மாப்பிள்ளையானவர் தன் கையில் கொஞ்சம் மஞ்சளை எடுத்து பெண்ணின் மேல் தெளிப்பார். இதேபோல் பெண்ணும் மாப்பிள்ளையின் மேல் மஞ்சளைத் தெளிப்பாள். பிறகு இருவருக்கும் தண்ணீரை வார்த்து வீட்டுக்குள் கூட்டிச் செல்வார்கள். இவர்களிடையே பெண்ணின் மேல் மாப்பிள்ளையும் மாப்பிள்ளை மேல் பெண்ணும் தண்ணி ஊற்றும் பழக்கம் இல்லை.

இறப்பு சீரின்போது கொள்ளிவைத்தவனுக்கு மீசையை சிரைத்து அம்மா நெய், அரப்பு தேய்த்து தண்ணி வார்த்துக் கொள்வார்கள். இதைச் சூ புதிய துணிகள் எடுத்துக்கொடுப்பது கொள்ளிவைத்தவன் பிறந்தவன் எடுத்துக் கொடுப்பான். அவன் மாமனார் வீட்டிலும்
(10) எடுத்துக் கொடுப்பார்கள்.

X மற்றபடி சென்ட் (Seent) என்பது வாசனைத்தைலம், திரவம் போன்ற பொருட்கள் இதை மனிதர்களில் இளவயது ஆண்கள், பெண்கள் தங்களுடைய உடம்பு நல்ல வாசனையுடன் இருக்கவேண்டும் என்பதற்காக தினமும் தங்கள் மேல் போட்டுக் கொள்வார்கள். தெய்வத்திற்கும் உபயோகிப்பார்கள். இந்தத் திரவத்தை மல்லிகை, முல்லை, ரோஜா போன்ற மலர்களிலிருந்து தயார் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

போட்டு கலந்து வைத்து அந்தத் தண்ணீரை ஒரு சொம்பில் மோந்து பெண்ணின் கையில் கொடுப்பார்கள். அந்தத் தண்ணீரை பெண்ணவள் வாங்கி மாப்பிள்ளையின் மேல் ஊற்றுவாள் இப்படியே மூன்று தண்ணியை மாப்பிள்ளைமேல் பெண் ஊற்றுவாள். பிறகு, அதுபோல் மாப்பிள்ளையின் கையில் தண்ணீரை மோந்து கொடுத்து பெண்ணின் மேல் ஊற்றச் சொல்வார்கள். அவரும் மூன்று சொம்பு தண்ணீரை பெண்மேல் ஊற்ற வேண்டும். பிறகு கவுண்டர்கள் கல்யாணங்களில் வெள்ளைச்சாதம், செஞ்சாதம் சுத்திப்போடுவது போல் இருவருக்கும் சுத்திப் போட்டு தண்ணி வார்ப்பார்கள். நிறை நாழியும் சுற்றுவார்கள். பிறகு, இவருடைய துணிகளையும் சேர்த்து கட்டியிருக்கும் முடிப்பை அவிழ்த்து விட்டு ~~வீடு~~ பெண் மாப்பிள்ளை இருவரையும் வீட்டுக்குள் கூட்டிச் சென்று விடுவார்கள்.

இவர்களின் இறப்புச்சீரின் போது கொள்ளிவைத்தவர் ~~[illegible]~~ மற்றும் பட்டுப் போட்டவர், கோடி போட்டவர், பின்னப்பூ போட்டவர் ஆகிய நால் ~~வருக்கும்~~ வரையும் கிழக்கு முகமாக நிறுத்தி கவுண்டர்கள் இறப்புச்சீரில் எப்படி தண்ணி வார்க்கிறார்களோ, அதே மாதிரி சீர் செய்து தண்ணி வார்ப்பார்கள் மாற்றம் கிடையாது.

கேள்வி 18.

பதில்: கோவிலில் பிராமணர், கவுண்டர், பிள்ளை, முதலியார் இவர்களுடனும் நாங்கள் (பண்டாரங்கள்) சாமிக்குப் படைக்கப்படும் சாதம் மற்றும் பஞ்சாமிர்தம் தேங்காய் பழம் இப்படிப்பட்ட எல்லா வகை பிரசாதங்களும் பெற்றுக் கொள்வோம்.

உடையார், நாடார், சோலிக்கொங்கு ஆசாரி, கோமுட்டி செட்டியார், நாயக்கர், வண்ணான், நாவிதன் இவர்கள் ஜாதிகளில் தேங்காய், பழம் விபூதி இவைகள் மட்டும் பிரசாதமாக எடுத்துக் கொள்வோம் மற்றபடி சாதம் பஞ்சாமிர்தம் இவைகளை எடுத்துக் கொள்ள மாட்டோம்.

பறையன், மாதாரி, குறவன் இவர்கள் ஜாதியில் விபூதி பிரசாதம் மட்டும் எடுத்துக் கொள்வோம் மற்றபடி சாதம், தேங்காய் பழம் இவைகள் ஒன்றும் எடுத்துக் கொள்ள மாட்டோம்.

இந்தக் கேள்வியில் நீங்கள் ~~[illegible]~~ குறிப்பிட்டிருப்பது போல் தெய்வத்தின் ~~பிரசாதத்தை~~ பிரசாதங்கள் பொதுவானதுதான். ஜாதிபேதமில்லாமல் சாப்பிடத்தான் வேண்டும். ஆனால் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற முறையில் கோவில் பிரசாதங்களிலும் பிரிவினை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள் முன்னோர்கள் என்ன செய்வது?